பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத வூ பங்குனி மீ 02 உ. சனிக்கிழமை [16-03-1991] UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 109

# சண்டையை நிறுத்தி பேச்சை ஆரம்பிக்குக!

## உலகத் திருச்சபை அரசிடம் வற்புறுத்து

கன்பரா, மார்ச் 16

வடக்கு — கிழக்கில் நடத்தும் வான் தாக்குதல் மற்றும் யுத்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தாமதம் இன்றி மீண்டும் பேச்சுக்களைத் தொடங்க வேண்டும்.

—இவ்வாறு உலகத் திருச்சபை ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் வலியுறுத்தி உள்ளது.

ஆஸ்திரேலியா, கன்பரா நகரில் உலகத் திருச்சபையின் ஏழாவது மாநாடு கடந்த மாதம் 7 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெற்றது.

அந்த மாநாட்டில் பொது விவகாரங்கள் குழு நிகழ்ச்சியில் ஸ்ரீலங்கா பிரச்சினையும் முக்கிய இடம் கொடுத்துப் பரிசீலனை செய்யப்பட்டது.

வளைகுடா யுத்தம், மத்திய கிழக்கு விவகாரம், உலக சமாதானம், மக்களின் காணி உரிமைகள், தென் ஆபிரிக்கா, சோவியத் குடியரசின் பால்டிக் குடியரசு விவகாரம் என்பவற்றுடன்—

ஸ்ரீலங்கா விவகாரமும் ஆராயப்பட்டது. திருத்தப்பட்ட நகல் வேண்டுகோள் ஒன்று தயாரிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ரஞ்சனின் எம். பி. பதவி மகன் றொஹானுக்கு!

கொழும்பு, மார்ச்16

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் மறைவால் உண்டான எம். பி. பதவி வெற்றிடத்துக்கு அவரது ஒரே புதல்வரான றொஹான் விஜேரத்தினா [வயது 33] நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு இதற்கான முடிவை எடுத்திருப்பதாக அறியவந்தது.

செயற்குழுக் கூட்டத்திற்கு ஜனாதிபதி பிரேமதாஸா தலைமை வகித்தார்

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தேசியப் பட்டியல் மூலமே எம். பி. யாக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [அ-எ]

## தொண்டர் ஆசிரியருக்கு விசேட நேர்முகப் பரீட்சை

### விரைவில் நிரந்தர நியமனம்

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோருக்கு விசேட நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு, நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கு ஏதுவாக கல்விப் பணிப்பாளர் உட்பட மூவர் கொண்ட குழுவினர், பாடசாலைகளுக்குச் சென்று தொண்டர் ஆசிரியர்களை நேரடியாகப் பரீட்சிக்க உள்ளனர். அதன் பின்னர் சம்பந்தப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அனேகமாக அடுத்த மாதம் [ஏப்ரல்] முதல் வாரத்தில் அந்த விசேட நேர்முகப் பரீட்சைகள் ஆரம்பமாகும் என்று அறியவருகிறது. [ஒ-5]

## சகலருக்குமான நிவாரணம் மேலும் இரு வாரங்களுக்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் சகலருக்கும் மேலும் இரண்டு வாரத்துக்கு விசேட உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இத் தகவலை யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் நேற்றுத் தெரிவித்தார்.

தற்போது அமுலில் இருக்கும் ஆறாம் கட்ட உலர் உணவு விநியோகம் பூர்த்தியானதன் பின்பு—

கப்பல்கள் மூலம் உணவுப் பொருள்கள் இங்கு வந்து சேர்ந்ததும் சகலருக்குமான இந்த இரண்டு வார உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஜூனில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இன்று வரை சகலருக்குமான [மாதாந்தம் 1,500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோர் உட்பட] இந்த விசேட உலர் உணவு நிவாரணம் நான்கு வாரங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. [உ-5]

## அவ்ரோ வட்டமிட்டது

குருநகர், மார்ச் 16

நேற்று மாலை 5.05 மணியளவில் பலாலியில் இருந்து வந்த அவ்ரோ விமானம் ஒன்று யாழ். நகரைக் குறிப்பாக கோட்டைப் பகுதியை ஒருதடவை சுற்றி நோட்டமிட்டுச் சென்றது. [உ-51]

## அருள்-89 தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 16

நேற்று முன்தினம் இரவு வீமன்காமத்தில் முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் "அருள் 89" தாக்குதல் நடத்தினர். [உ]

## நேற்றும் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஆனையிறவு இராணுவத்தினர் நேற்றும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

குறிஞ்சாத்தீவு, இயக்கச்சி, உமையாள்புரம் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-15]

## முச்சந்தி முரளி



அப்ப... இரண்டு வார நிவாரணம் ... தடிப்பினம் எண்டு சொல்லுங்கோ......!

## இராமர் ஆலயப் 'போர்' மீண்டும் வெடிக்கிறது!

புதுடில்லி, மார்ச் 16

அயோத்தி இராமர் ஆலயத்தை மீட்கும் போராட்டத்தை இந்து மத அடிப்படை வாதிகள் மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

தலைநகர் புதுடில்லியில் அடுத்த மாதம் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்துவதற்கு விஸ்வ இந்துபரிஷத் ஒழுங்கு செய்து வருகிறது

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் 20 லட்சம் இந்துக்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று இந்து மத அடிப்படை தீவிரவாதிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

## சிலாவத்துறையில் பொம்மர் குண்டு வீச்சு

மன்னார் மாவட்டம் சிலாவத்துறையில் நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை இரு பொம்மர்கள் எட்டுக் குண்டுகளை வீசின.

தொடர்ந்து இப் பகுதியில் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தபடி இருந்தது.

வீடு ஒன்று சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் மேலதிக விவரங்கள் கிடைக்கவில்லை. [ஓ]

## தாண்டிக்குளம் பகுதியில் புலிகள் நேற்று தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 16

நேற்றுக் காலை 9 மணியளவில் வவுனியா தாண்டிக்குளம் புதுவீதிச் சந்தியில் நின்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் 'அருள்-89' தாக்குதல் நடத்தினர். ஏற்பட்ட சேதவிவரம்குறித்து தகவல் கிடைக்கவில்லை.

இத்தாக்குதலைத் தொடர்ந்து சாஸ்திரி கூழாங்குளம் பகுதியை நோக்கி இராணுவத்தினர் முப்பதிற்கும் அதிகமான ஷெல்களை ஏவிவிட்டனர். [உ]

## புலிபாய்ந்தகல்லில் திடீர் மோதல் மூண்டது

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலையில் கிரான், செங்கலடி, சந்திவெளி இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் புலிபாய்ந்தகல்லைச் சுற்றிவளைக்க முயன்ற போது அங்கு வைத்து அவர்கள்மீது திடீரென விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். சேத விவரம் தெரியவரவில்லை.

அப்பகுதியில் இரண்டு மிதிவெடிகள் வெடித்ததில் இரு இராணுவச் சிப்பாய்கள் தமது கால்களை இழந்தனர். [உ]

## சம்பூரிலும், கூனித்தீவிலும் தமிழரின் 85 வீடுகள் எரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் திருகோணமலை மாவட்டம் சம்பூர், கூனித்தீவுப் பகுதிகளைச் சுற்றி வளைத்த இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவலர்களும் அப் பகுதிகளிலுள்ள தமிழ்ப் பொதுமக்களை அடித்துத் துன்புறுத்தினர்.

இப்பகுதிகளிலுள்ள 85 வீடுகள் எரிக்கப்பட்டுவிட்டன என்றும் தெரிய வருகிறது.

படையினரால் துன்புறுத்தப்பட்ட பொதுமக்கள் 7 பேரில் ஒருவர் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் ஒரு வீட்டில் இருந்த 10 பவுணும், 50 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஓ]

## மட்டக்களப்பு டிப்போ அத்தியட்சகர் கைதானார்

கொழும்பு, மார்ச் 16

மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர் இராணுவத்தினரால் விசாரணைக்குக் கூட்டிச்செல்லப்பட்டார்.

கடந்த செவ்வாய் மாலை இச்சம்பவம் நடந்தது.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இ. போ. ச. ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இதன் காரணமாக உள்ளூர் பஸ் சேவைகளும் மற்றும் திருமலை, கொழும்பு ஆகிய இடங்களுக்கான பஸ் சேவைகளும் முற்றாக ஸ்தம்பித்தன.

இக் கைது பற்றி பொலீஸ் அத்தியட்சகர் நிஹால் கருணாரத்தினாவிடம் அரச அதிபர் மற்றும் இராணுவ அதிகாரிகளிடம் முறையிடப்பட்டது.

பொலீஸ் அதிபர் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கைதான இ. போ. ச. அத்தியட்சகரை தம்மிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

விசாரணையின் பின்னர் அவரை விடுதலை செய்வதாக பொலீஸ் அதிபர் அளித்த உறுதிமொழியை அடுத்து இ. போ. ச. ஊழியர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய நிலையில் உள்ள 17'X3½' அளவுடையபெயர்ப் பலகை [அலுமினியம்] விற்பனைக்கு உண்டு தொடர்பு: 588/2 நாவலர் வீதி,(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன் ஒழுங்கை] அரியாலை, யாழ்ப்பாணம். [சி/5852]

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை வீரகத்தி இராமநாதன் 235/1, ஏத்துக்கான் நீர்கொழும்பு முகவரியிடப்பட்ட கட்டடத்திணைக்களத்திற்கான ஒப்பந்தக்காரர் பதிவுப்புத்தகம் சிவப்பு மட்டையுடனானது. 12 ஆம் திகதி கோப்பாய் - கச்சேரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [16130]

### ரைப்ரைட்டர்கள்

Typewriters:- தமிழ் - ஆங்கிலம் வாங்கவும், விற்கவும். சிறந்த முறையில் திருத்தவும், எல்லாவித தட்டச்சு இயந்திரங்கள், உதிரிப்பாகங்களுக்கும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக] [சி-5835]

### புளொக் புகைப்படம்

புளொக் [Block] புகைப்படம் - றபர்சீல் - கலர் படம் - ஓவியம்-பிறேம்போடுதல் - கலர் பிலிம் சுருள்கள்-ஸ்ரிக்கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள்! கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். [சி-5814]

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், கொப்பி, பேப்பர், போத்தல், பித்தளை, செம்பு, இமெந்து, கோழித்தீன், வெற்றுப்பைகள் வாங்கப்படும். விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book House 57, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி, முரசொலிக்கு முன் லேன். யாழ்ப்பாணம். [16045

### நோவு எண்ணெய்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய், எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். [14925]

## விவசாயிகளுக்கு இலவசமாக மண்எண்ணெய்

நவாலி, மார்ச் 16

ஆனைக்கோட்டை கிராம சேவகர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு மண்எண்ணெய் உட்பட எள்ளு, பயறு, கௌபீ, உழுந்து போன்ற சிறு தானியங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

ஆனைக்கோட்டை விவசாய உற்பத்திக் குழுவின் தலைவர் திரு லெ. சவுந்தரதாசன் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் பயனாக புனர்வாழ்வு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மேற்படி பொருள்கள் ஆனைக்கோட்டை விவசாய உற்பத்திக் குழுநிலையத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டன.

[இ-100]

## குடிதண்ணீர் வசதி

நெடுந்தீவு, மார்ச் 16

நீரிறைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் யாழ்.செயலகத்தில் மீண்டும் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. [இ-111]

---

பட்டதாரிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

## இலங்கை கல்வி நிருவாக சேவை

(S. L. E. A. S)

III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கு நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைக்கான

## விசேட பயிற்சி வகுப்புகள்

பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை

## ஆரம்பம்: 23-03-91

முற்பகல்: 9 00 மணி

பாடநெறி: 1. இரகித்தல்
2. நுண்ணறிவுத்தேர்வு

தகைமைகள்: 22—30 வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகள் யாவரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 25—03—91**

பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களையும் விவரத்திரட்டினையும் எம்மிடம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில் மட்டும்.
★ இலவச பாடக்குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 280.00 (முழுப்பயிற்சிக்கும்)

விவரங்களுக்கு:
நேரில் மு. ப. 9-00 —11 மணி வரை

## ASTAN INSTITUTE

101/10, STANLY ROAD,
JAFFNA.
[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]

[சி-5854]

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

15 - 03 - 90 அன்று பூம்புகார் கடலில் சுழி விபத்தில் அகால மரணமடைந்த யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை மாணவன்

**வில்பிரட் ரஞ்சித்**

ஆண்டு ஒன்று சென்றாலும் உன் நினைவில் வாழும்!



யாழ்/ இந்து மகளிர் கல்லூரி 1990 ஆண்டு:
G. E. L.T மாணவர்கள்

[16126]

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
18 - 06 - 1920

மறைவு:
27 - 03 - 1990

திதி:
16 - 03 - 1991



அமரர்
## சோமசுந்தரம் சுப்பிரமணியம்
[இளைப்பாறிய அதிபர்]

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! ஆறாது உங்கள் பிரிவு ஆயினும் உங்கள் நினைவுகள் என்றும் அழியாதவை.

குடும்பத்தினர்.

புங்குடுதீவு - 6

---

## முன்மாதிரிப் பயிற்சிப் பரீட்சையும் இலவச கருத்தரங்கும்

(தடைப்பட்ட பரீட்சைகள்)

பிரவேசம்: எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.

**A/L 90 [01 - 04 1991 முதல்]**

பரீட்சை: இரசாயனவியல். பௌதீகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் பகுதி I மட்டும் பயிற்சிப் பரீட்சையாக நடத்தப்படும்.

கருத்தரங்கு: விஞ்ஞான, வர்த்தக, கலைப்பிரிவுகளின் அனைத்துப் பாடங்களின் I, II பகுதிகளுக்குரிய மாதிரி வினாத்தாள்களுக்கான கருத்தரங்கு இலவசமாக நடத்தப்படும்.

**O/L 90 [25 - 03 - 1991 முதல்]**

அனேக பெற்றோர், ஆசிரியர், மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க. பரீட்சைக்கான அனைத்துப் பாடங்களும் பகுதி I, II க்கு உரிய பயிற்சிப் பரீட்சை நடத்தப்படும்.

விடைத்தாள்கள் திருத்தப்பட்டு, கருத்தரங்கு இலவசமாக நடத்தப்படும்.

ஆண்டு 5 [புலமைப் பரிசில் பரீட்சை]
கணிதம், தமிழ்

23 - 03 - 91 பி. ப. 3-00 மணி தொடக்கம் பரீட்சை.
24 - 03 - 91 பி. ப. 3-00 மணி தொடக்கம் இலவச கருத்தரங்கு.

[பரீட்சைப் பெறுபேறுகள் வழங்கப்படும்.]

மாணவர்களின் போக்குவரத்து சிரமங்களைக் கருத்தில் கொண்டு

★ யாழ். மாணவர்களுக்கு — BOND கல்வி நிறுவனம், 58 A, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
★ தென்மராட்சி — திரு. பாலகிருஷ்ணன், Brilliant கல்வி நிறுவனம், சங்கத்தானை, சாவகச்சேரி.
★ வடமராட்சி — திரு. A. N மனுநீதி, விக்னேஸ்வராக் கல்லூரி, சரவெட்டி.
★ தீவகம் — திரு. கதிர், V. T. C., வேலணை.
★ காரைநகர் — திரு. V. இந்திரன், கவிதா கல்வி நிலையம், செம்பாடு, காரைநகர்.
★ கிளிநொச்சி — திரு. மரியதாஸ். விஞ்ஞானக்கல்வி நிலையம். கிளிநொச்சி.

மேலதிக விவரங்களுக்கு:

**Examination Unit**

## BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[16132]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
18 - 06 - 1925

மறைவு:
15 - 02 - 1991



## இரத்தினசிங்கம் தம்பிப்பிள்ளை
[பொன்னுத்துரை]

பூநகரி ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட இரத்தினசிங்கம் தம்பிப்பிள்ளையின் [பொன்னுத்துரை பூநகர்] அந்தியேட்டிக்கிரியை 16-03-91 சனிக்கிழமை நடைபெற்று, 17-03 91 ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கிரியை அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

ஆலங்கேணி, பூநகரி. [16133]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் மலேரியா நோய்
# இவ்வருடம் 10 மடங்கு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16
கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டோரின் எண்ணிக்கை சென்ற ஆண்டை விட பத்து மடங்கு அதிகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 200 பேரின் இரத்தம் பரிசோதிக்கப்பட்டது. அதில் 30 சதவீதமானோர் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மொத்தத்தில் 11 சதவீதமானோர் மூளையைப் பாதிக்கும் மலேரியாவால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிய வந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மலேரியாத் தடைப் பகுதியின் பொறுப்பதிகாரி டாக்டர் கே. சிவகுரு இத்தகவல்களைத் தெரிவித்தார்.

கடந்த ஏழு மாதங்களுக்குப் பொதுவாக 125 பெட்டி மலத்தியன் மட்டுமே கிளிநொச்சி மாவட்டத்திற்குக் கிடைத்துள்ளது. அது ஒரு மாதத்துக்கு மட்டுமே போதுமானதாகும்— என்றும் டாக்டர் சிவகுரு தெரிவித்தார்.

மலத்தியன் கொண்டு வருவதற்குக் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி மறுத்ததாலேயே மலேரியா தீவிரமாகப் பரவி இருப்பதாக சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. [அ-18]

## கூட்டுறவு ஊழியருக்கு காப்புறுதி

கொழும்பு, மார்ச் 16
கூட்டுறவு ஊழியர்களுக்கு என விசேட காப்புறுதித் திட்டம் ஒன்று அடுத்த மாதம் முதல் அமுலுக்குக் கொண்டு வரப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊழியரின் பெயரிலும் 100 ரூபா வீதம் மாதம் செலுத்தப்படும்.

இத்தொகையில் 50 ரூபாவை சம்பந்தப்பட்ட ஊழியரும் எஞ்சிய 50 ரூபாவை அரசும் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## போராளிகள் வேலூர் சிறைக்கு

சென்னை, மார்ச் 16
தமிழ்நாடு, வேலூர் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 660 இலங்கைத் தமிழ்ப் போராளிகளில் 161 பேர் வேலூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## பதுங்கு குழி

புளியங்கூடல், மார்ச் 16
விமானத் தாக்குதலில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும்பொருட்டு தீவுப் பகுதியின் பிரதான சந்திகள், சந்தைகள், பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்கள் ஆகியவற்றில் பதுங்கு குழிகளை உடனடியாக அமைக்கும்படி பொது மக்களையும், வர்த்தக சங்கங்களையும் தீவக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் சுதா கேட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து தீவுப் பகுதியின் பிரதான சந்திகள், புளியங்கூடல், வேலணை உட்பட பல பகுதிகளிலும் பதுங்கு குழிகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. [இ-125]

## ஜெயலலிதா அணியில் ராமராஜன்

சென்னை, மார்ச் 16
நடிகர் ராமராஜன் மீண்டும் ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க வில் சேர்ந்து கொண்டார்.

ஜெயலலிதாவுடன் கருத்து வேறுபாடு கொண்டு திரு. திருநாவுக்கரசுவுடன் அ. தி. மு. க வில் இருந்து ராமராஜன் வெளியேறினார் என்பதும்— பின்னர் அவர்கள் அ. தி. மு. க-2 என்ற புதிய கட்சியை அமைத்தனர் என்பதும் தெரிந்தவையே. [உ-எ]

## பருத்தித்துறை; மேட்டு நில பயிர்ச் செய்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16
பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டுள்ளது.

முதற்கட்டமாக பரீட்சார்த்தமாக சுமார் 20 பரப்பு மேட்டுநிலக் காணி பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

இக்காணிக்குள் குழாய்க் கிணறு ஒன்றும் சங்கத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 80 ஆயிரம் ரூபா முதலீட்டில் இப்பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெங்காயம், கௌபீ, மரவள்ளி குரக்கன், உழுந்து, கத்தரி போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. [இ-15]


## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் எள்னால்பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தகத்தில் பேராசிரியர்
2. வியாபார நிருவாகத்தில் பேராசிரியர்
3. வர்த்தகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் I
4. வியாபார நிருவாகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் I
5. புவியியலில் உதவி விரிவுரையாளர்

துறைத்தலைவரினால் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப் படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் [தகுதிகாண்] ஒருவரைப் பீடாதிபதி விரிவுரையாளர் [தகுதி காண்] என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை ரூபா 4,500 - 10 x 200 - 6,500 [மாதமொன்றுக்கு] சம்பள அளவுத்திட்டத்தில் வைக்க முடியும்.

சம்பள அளவுத் திட்டம்:
பேராசிரியர்: ரூபா 12,200 - 6 x300 14 000/- [மாதமொன்றுக்கு]
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I: ரூபா 9,600-8 x 250 - 11,600/- [மாதமொன்றுக்கு]
உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு [நிலையானது] ஆண்டு ஒன்றுக்கு

பேராசிரியர் பதவிகளுக்கும், சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகளுக்கும் விண்ணப்ப முடிவுத் திகதி 1991 - 06 - 03 ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத் திகதி 1991 - 05 - 02 ஆகும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு:
பேராசிரியர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

— பதிவாளர்.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991 - 03 - 08
[சி-5841]



## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (T. R. R. O.)

## பதவி வெற்றிடம்

### கணக்குப் பதியுனர் [BOOK KEEPER]

மேற்படி நிறுவனத்தில் கணக்குப் பதியுனர் ஒருவருக்கான வெற்றிடமுள்ளது. விண்ணப்பிப்போர்:

[i] Book Keepers' Final Examination சித்தி பெற்றவராகவும்
[ii] ஐந்து வருடங்கள், கணிக்கப்பெறத்தக்க நிறுவனத்தில் வேலை செய்தவராகவும்
[iii] கம்பெனிக் கணக்குகளை வைத்திருப்பதிலும், தயாரிப்பதிலும் ஆற்றல் உள்ளவராகவும்
[iv] 25 — 40 வயதினராகவும்
[v] தெளிவான கையெழுத்துடையவராகவும் இருத்தல் வேண்டும்

உரிய தராதர சேவைப் பத்திரங்களுடனும், அண்மையில் பெற்ற இரு குணச் சான்றிதழ்களுடனும்,

21 - 03 - 1991 அன்று காலை 11-00 மணிக்கு 106, நாலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்கவும். இருபாலரும் விண்ணப்பிக்கலாம், சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,

106, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். [இ/5848]



நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயம்

## வருடாந்தப் பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்

கூட்டத் திகதி:- 31-03-1991 [ஞாயிற்றுக்கிழமை] பி. ப. 4-00 மணிக்கு நடைபெறும்
இடம்:- ஆலய முன் மண்டபம்
விண்ணப்பம் கோரப்படும் பதவி விவரங்கள்:-

தலைவர் 1 உபதலைவர்கள் 2
செயலாளர் 1 உபசெயலாளர் 1
பொருளாளர் 1 உபபொருளாளர் 1
நிர்வாக சபை உறுப்பினர்கள் 9

விண்ணப்பப் படிவங்கள் ஆலய காசாளரிடமிருந்து பெற்று நிரப்பி 25- 03 - 1991 ஆம் திகதிக்கு முன் ஆலய முன் கதவில் தொங்கவிடப்பட்டுள்ள தபால் பெட்டிக்குள் சேர்க்கவும்.

யாப்பு:-
நடைமுறையிலுள்ள யாப்பில் மேலதிக விதிகளை சேர்க்கவோ / நீக்கவோ விரும்புவோர் எழுத்து மூலம் 25-03-91க்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வ. பரமசிவம்,
செயலாளர்.
[16116]



ஓம் சக்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்,
நிகழும் பிரமோதூத வருடம் பங்குனி மாதம் 4ஆம் திகதி [18-03-1991] திங்கட்கிழமை பகல் 10-48 மணிமுதல் 11-36 மணிவரை வரும் சுபயோக சுபமுகூர்த்தத்தில்,

திருநிறை செல்வன் **முத்தையாவுக்கும்** [முருகன் ஆபரண மஹால், சுன்னாகம்]
திருநிறை செல்வி **சீதாவுக்கும்**

ஸ்ரீ காமாட்சி அம்பாள் [நாச்சிமார் கோவில்] ஆலய மண்டபத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி முருகன் ஆச்சாரி வள்ளியம்மா
192, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இ. ஆறுமுகம் - புவனேஸ்வரி தம்பதிகள்
32A, சேர் பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

இரு வீட்டார் அழைப்பு.
[16123]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ. த. சாதாரண தரம்
## PRACTICE EXAM
## பயிற்சிப் பரீட்சை

1990 Dec இல் தடைப்பட்ட க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குரிய மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை நடைபெற உள்ளது.

★ யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றலாம். ஆனால் பரீட்சை நிலையங்கள் யாழ். மாநகர சபை எல்லையினுள்ளேயே அமையும்.

★ யாழ். மாநகர சபை எல்லை தவிர்ந்த குடாநாட்டின் வேறு பகுதிகளில் பரீட்சை நிலையங்களை அமைக்க விரும்பும் நிறுவனங்கள் கீழ்க் குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொண்டு அதனை ஒழுங்கு செய்யலாம்.

★ கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம், தமிழ் ஆகிய ஐந்து பாடங்களில் மட்டுமே இப் பரீட்சை நடைபெறும்.

★ 20 - 03 - 91 க்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட முகவரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து பரீட்சைக் கட்டணமாக ரூபா 50 செலுத்துதல் வேண்டும்.

தாமதமாக வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

★ பரீட்சைக்கான நேர அட்டவணை, சுட்டெண், பரீட்சை நிலையம் போன்ற விவரங்கள் அடங்கிய அனுமதி அட்டை மாணவர்களுக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

★ தகுதி அடிப்படையில் பரிசுகள் வழங்கப்படும்:

ஐந்து பாடங்களுக்குரிய மொத்தப் புள்ளிகளில் அதி கூடுதலான கூட்டுத் தொகையைப் பெறுபவருக்கு தங்கப்பதக்கமும், ஒவ்வொரு பாடத்திலும் கூடுதலான புள்ளியை பெறுபவர்களுக்கு விசேட பரிசுகளும் வழங்கப்படும்.

EXAMINATION UNIT

UNIVERSAL

KANTHARMADAM, JAFFNA.

★★ பரீட்சை மேற்பார்வையாளர்களாக, வினாத்தாள் திருத்துபவர்களாக கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்கள் இத்துறையில் தமது அனுபவம், தகைமை போன்றவற்றைக் குறிப்பிட்டு 20 - 03 - 91 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

[சி-5843]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் நாகலிங்கம் சின்னத்தங்கம்

தோற்றம்: 0?-10-1941 மறைவு: 14-02-1991

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எம்மவரையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனிடம் சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து 31 நாட்கள் சென்றாலும், இன்றும் எங்கள் கண்முன்னே நடமாடும் தெய்வமாக காட்சி தருகின்றீர்கள்.

உங்கள் நினைவால் துயருறும்;
சணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உறவினர்கள்.

தகவல்: க. நா. யோகேஸ்வரன்
தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம், பண்டத்தரிப்பு(?)
வரணி மத்தி, வரணி. [இ/5836]

## வழக்கறிஞர்கள் கண்டனம்

சென்னை, மார்ச் 16
தமிழகத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் சார்பாக நீதிமன்றங்களில் வாதாட தமிழக வழக்கறிஞர்களுக்கு அனுமதி மறுக்கும் செயலைக் கண்டித்து 126 வழக்கறிஞர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். [உ-எ]

## ஊறணியில் ஹெலித்தாக்கு

யாழ்ப்பாணம் மார்ச் 16
வல்வெட்டித்துறை, ஊறணி கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் 2 மணியளவில் ஹெலி 50 கலிபர் தாக்குதலை நடத்தியது.
படகு ஒன்று சிறு சேதத்திற்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## ஒய்வூதியர் பராமரிப்பு நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
உதவி இன்றி இருக்கும் ஒய்வூதியர்களைப் பராமரிப்பதற்கு நிலையம் ஒன்றை நிறுவும் முயற்சியில் நல்லூர் ஒய்வூதியர் சங்கம் ஈடுபட்டு வருகிறது.
கைதடி அரச முதியோர் இல்ல முன்னாள் அதிகாரி திரு. கே. சற்குணலிங்கம் தலைமையில் இது தொடர்பான செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. [இ]

## தீவுப்பகுதி விவசாயிகள் பாதிப்பு

அனலைதீவு, மார்ச் 16
பல லட்சம் பெறுமதியான மிளகாய், வெங்காயம், புகையிலை போன்றவற்றை உற்பத்தி செய்த தீவுப்பகுதி விவசாயிகள் நீர் இறைக்க மண்ணெண்ணெய் கிடைக்காத காரணத்தால் அவற்றை கைவிட வேண்டிய நிலையில் உள்ளனர்.
ஒரு சிலர் பழைய முறைப்படி துலா மூலம் நீர்ப்பாசனம் செய்கின்றனர்.
எனினும் எண்ணெய், உரம் தட்டுப்பாட்டால் பெரும் பாதிப்பு இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. [இ-18]

## கூட்டெரு தயாரிக்க முயற்சி

மானிப்பாய், மார்ச் 16
எதிர்காலத்தில் பசளைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாதிருக்க, கூட்டெருவைத் தயாரிக்கும் முயற்சியில் கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஈடுபாடு காட்ட உள்ளன.
அமோனியா, பொட்டாசியம், யூரியா போன்ற சகல பசளைகளின் தன்மைகளையும் கூட்டெரு கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது (இ-90)

## சீருடைகள் வழங்கப்படுகின்றன

தென்மராட்சி, மார்ச் 16
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள சுகாதாரத் திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடந்த வருடத்திற்கான சீருடைகள் பிராந்திய சுகாதார திணைக்களப் பணிப்பாளரினால் சகல வைத்திய நிறுவனங்களுக்கும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. [இ-117]

## சிரமதானம்

கோப்பாய், மார்ச் 16
கோப்பாய் கிறிஸ்தவகல்லூரியின் பழைய மாணவர்கள், பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள், ஆகியோர் இணைந்து பாடசாலை அமைந்திருக்கும் [illegible] துப்பரவு செய்தனர். [இ-72]


# Computer Programming Courses

| | | Commencement |
|---|---|---|
| BASIC | | |
| Day Batch | — | 19-03 91 |
| Weekend Batch | — | 30-03 91 |
| PASCAL | | 30-03-91 |
| LOTUS 1, 2, 3 | | 22-03 91 |
| d BASE III + | | 21 03 91 |

Lectures by the Members of the Institute of Data Processing Management

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

[Leaders in Computer Education]
16, 3rd CROSS STREET,
JAFFNA

[C-5850]

இப்போது விற்பனையாகிறது!

## ஆரம்ப சுகாதார சேவையாளருக்கு ஒரு வழிகாட்டி

பேராசிரியர் த. இராமதாஸ் எழுதியது

★ சுகாதார சேவையாளருக்குச் சிறந்த வழிகாட்டி
★ மாணவர்களின் மேலதிக அறிவுக்கு நல்ல நண்பன்.
★ சகல மக்களும் —
தமக்கும், தமது குழந்தைகளுக்கும் நோய் வராமல் தடுத்துக் கொள்வதற்குச் செய்ய வேண்டிய வழிமுறைகளைக் கூறும் அரிய கைநூல்.

[முதலாவது பதிப்பு முற்றாக முடிந்து விட்டது. இது இரண்டாவது பதிப்பு]

ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய சுகாதார நூல்.

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
விலை ரூபா 45-00

சுக வாழ்வே பெரு வாழ்வு! [C/5853]


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
### துரைச்சாமி மகாலட்சுமி



தோற்றம்: 29 - 5 - 1920

மறைவு: 26 - 3 - 1990

திதி: 16 - 3 - 1991

எங்கள் அன்புத் தெய்வமே அம்மா! எம்மை எல்லாம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ வைத்த தெய்வமே! உங்கள் புன்னகை தவழும் இனிய முகம் எம் கண்களில் தெரிகின்றதே அம்மா! அம்மா நீங்கள் எங்களை எல்லாம் விட்டுப் பிரிந்து சென்று ஆண்டு ஒன்று சென்றதம்மா! எங்கள் இதயத்தில் உங்கள் நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம். [16121]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நீதிமன்ற மகத்துவம்

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத்தமிழர்களைக் கண்டபடி கைது செய்து காவலில் வைக்கக் கூடாது. இந்தியச் சட்ட விதிமுறைகளுக்கு முரணாக அவர்களைக் கைது செய்வதோ காவலில் வைப்பதோ நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறு சென்னை உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பை நோக்குமிடத்து வழக்கைத் தொடர்ந்த ஈழத் தமிழரைத் தமிழகப் பொலிஸார் தமது நாட்டுச் சட்ட விதிகளுக்கு முரணாக, அவற்றைப் பின்பற்றாமல், தமது மனப்போக்குப்படி கைது செய்திருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

தமிழகத்தில் ஈழத் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று மத்தியில் உள்ள சந்திரசேகர் அரசு தூண்டப்பட்டது மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநில அரசாங்கத்தை அது கலைத்தது. ஆளுநர் ஆட்சி என்ற பெயரில் மத்திய அரசு இப்போது தானே தமிழகத்தை ஆண்டு வருகிறது.

ஈழத் தமிழ்ப் போராளிகள் விவகாரத்தில் தி. மு. க. அரசு அசட்டையாக இருந்தது என்று வெளியே காட்ட வேண்டிய கட்டாயம் மத்திய அரசுக்கு உண்டு. இல்லையேல் மாநில அரசைத் தான் கலைத்தமையை நியாயப்படுத்த முடியாமற் போய் விடும்!

அதன் காரணமாகவே தமிழகத்தில் தங்கியுள்ள தமிழர்களைக் கண்டபடி கைது செய்தும், காவலில் வைத்தும் தனது கணக்கு சரியானதே என்று நிரூபிக்கப் பார்க்கிறது. அதன் பொருட்டு தமிழக அதிகாரிகளையும் வழி நடத்தி இருக்க வேண்டும். அதன் விளைவாக அகதிகளாகத் தஞ்சம் கோரி, அடைக்கலம் தேடிச் சென்ற ஈழத் தமிழர்கள் பலரும், போராளிகளாகப் பெயர் சூட்டப்பட்டு, கைது செய்யப்பட்டுச் சிறைகளில் தள்ளப்பட்டுள்ளார்கள் எனலாம்.

இந்திய மத்திய அரசினதும், அதிகாரிகளினதும் அடாவடித்தனத்தை உயர் நீதிமன்றம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. உள்நாட்டுப் பிரசைக்கு ஒரு சட்டம், வெளிநாட்டுப் பிரசைக்கு வேறு சட்டம் என்று இல்லாமல் மனிதன் எவனாக இருந்தாலும் அவன் மனிதனே, என்ற மகத்துவமான கோட்பாட்டுடன் இந்திய அடிப்படைச் சட்ட விதிகள் அமைந்திருப்பதும், அவற்றின் பிரகாரம் நீதிமன்றம் நீதியை நிலைநாட்ட முன் வந்ததும் பாரதத்துக்குப் பெருமை தருவனவாகும்.

இந்திய நீதிமன்றம் அரசாங்கத்தின் கைப்பொம்மையாக இல்லாமல், துணிச்சலுடன் நீதியை வழங்கும் ஸ்தாபனமாக இயங்குவது மகிமைக்கும், கீர்த்திக்கும் உரியதாகும். நீதி தெய்வீகமானது என்ற தத்துவத்தைக் கடைப்பிடிக்கும் இந்திய நீதித்துறை ஏனைய பல நாடுகளுக்கு - முன்மாதிரியாக அமைகிறது எனலாம்.

காருண்யம், மனிதாபிமானம், தர்மம், மக்கள் நலன் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு அண்ணல் காந்தி இந்தியாவில் விதைத்த அரசியலை, பின்னர் வந்த அரசியல் தலைவர்கள் நாசம் செய்துவிட்டார்கள் என்பது கவலைக்குரியது. ஆயினும் நீதிமன்றம் தனது கீர்த்தியை, மகத்துவத்தை, மகோன்னதத்தை இழக்கவில்லை என்பது பாராட்டுக்குரியது.

# ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்

# ஒப்பந்த ரீதியில் நியமனம்

சுய விருப்பின் கீழ் ஓய்வு பெற்ற-கணித, விஞ்ஞான, ஆங்கிலப் பாட ஆசிரியர்களையும், மற்றும் அதிபர்களையும்- ஒப்பந்த அடிப்படையில் மீள ஒருவருட காலத்துக்கு நியமிக்கும் அதிகாரம் வட மாநிலக் கல்விப்பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

1990 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒய்வு பெற்றோரை இந்தத் திட்டத்தின் கீழ் நியமித்து அது பற்றிய விவரங்களை கல்விச் சேவைப் பிரிவுக்கு அறிவிக்கும்படி வட மாநில கல்விப் பணிப்பாளர் கேட்கப்பட்டிருப்பதாகவும் அறிய வருகிறது [உ-5]

## வினாத்தாள்கள் தவிர்ந்த ஏனையவை வந்து சேர்ந்தன

எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கு, கிழக்கில் நடைபெற விருக்கும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்கள் தவிர்ந்த ஏனைய சகல தஸ்தாவேஜுக்களும் பரீட்சை ஆணையாளரினால் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை மேற்பார்வையாளர்கள் நிரந்தர நோக்குநர்கள், பரீட்சை நிலையங்கள், போன்றவற்றின் விவரங்களே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையங்களாக இருக்கும் பாடசாலைகளின் அதிபர்கள் பரீட்சை நிலையங்களுக்கு மேலதிக மேற்பார்வையாளர்களாக கடமை ஆற்றும் முறை 1991 முதல் நீக்கப்பட்டுள்ள போதிலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைபெறவிருக்கும் விசேஷ பரீட்சைகளுக்கு பாடசாலை அதிபர்களும் மேலதிக மேற்பார்வையாளர்களாக இருக்கும் முறையே, நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது [இ-5]

## வினாத்தாள் கொண்டுவர செஞ்சிலுவை சங்கம் உதவும்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள விசேஷ ஜி சி ஈ உயர்தரப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை கொழும்பில் இருந்து பரீட்சை நிலையங்கள் உள்ள பகுதிகளுக்கு கொண்டுசேர்க்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மற்றும் தொண்டர் நிறுவனங்களினது உதவியைப் பெறுவது என்று பரீட்சைத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இத்தகவலை கொழும்பில் பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல வெளியிட்டார்

கடந்த ஒன்பதாம் திகதி கொழும்பில் நடந்த வடக்கு-கிழக்கு பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்களின் மாநாட்டில் இம் முடிவு எடுக்கப்பட்டதாகவும் ஆணையாளர் தெரிவித்தார், [இ - எ]

## குடாநாட்டில் 84 பேருக்கு நிரந்தர அதிபர் நியமனம்

யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் தற்காலிக அதிபர்களாகக் கடமையாற்றிய 84 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

1989 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதியன்று தமது பாடசாலைகளில் மூன்று வருட சேவையை தற்காலிக அதிபராய் பூர்த்தி செய்தோருக்கே இந்த நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

இது தொடர்பான நியமன அறிவுறுத்தல்கள் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இந்த நியமனம் பற்றி சம்பந்தப்பட்டோருக்கு விரைவில் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-5]

### புலமைப் பரிசில் பரீட்சை:

## இடம் பெயர்ந்தோருக்கு விசேட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வடக்கு - கிழக்கில் இடம் பெயர்ந்திருக்கும் — 1990 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்ற — சகல மாணவர்களையும் அவர்கள் தற்போது கல்வி பயிலும் பாடசாலை ஊடாக புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கும் அதிகாரம், அந்தந்த மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்குரிய படிவங்கள் மூலம் விண்ணப்பிக்கும் மாணவர்களின் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளவும் —

அவர்களுக்கு புதிதாக சுட்டிலக்கங்களை வழங்கவும் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அனுமதிக்கப்படுவோர் பரீட்சை எழுதுவதற்கு வசதியாக — ஒவ்வொரு பரீட்சை மண்டபத்திற்கும் மேலதிகமாக பத்து வினாத்தாள்கள் அனுப்பி வைக்கப்படும் — என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்திருக்கின்றார்

கடந்த 9 ஆம் திகதி இப் பரீட்சை தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், இது பற்றி பரீட்சை ஆணையாளர் அறிவித்தார்.

இத்தகைய விண்ணப்பங்களை, பரீட்சை விடைத்தாள்களை அனுப்பும் போது பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கும்படியும் — பரீட்சைக்குப் பின்னர் இந்த விண்ணப்பங்களை திணைக்களம் கோவைப்படுத்திக் கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்

இவ்வாறு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு வழங்குவதற்கென ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஐநூறு சுட்டிலக்கங்கள் வரை ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அறிய வருகிறது.

மேற்படி பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-5]

## பாடசாலை அதிபர்களுக்கு கூடுதல் அதிகாரம் வேண்டும்

### கல்வி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 16

பாடசாலை அதிபர்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொழும்பில் கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பது நமது நாட்டுக்கு புதிதான விஷயம் அல்ல. ஆனால் அதிபர்களுக்கு நிர்வாகத் துறையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பது புதிதான ஒன்றாகும். பாடசாலை அதிபர்களுக்கு ஆகக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படவில்லையானால் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் எந்தவிதப் பயிற்சியினாலும் பாடசாலைகள் நன்மை அடையா.

கல்வி அமைச்சு மற்றும் கல்வித்திணைக்களம் ஆகியவற்றில் இருந்து வரும் கட்டளைகளை எதிர்பார்த்தே அதிபர்கள் செயற்படுகிறார்கள். இது பயன்தரத்தக்க நிர்வாகத்தைக் கொண்டு வராது.

இன்று பாடசாலை அதிபர்கள் வெறும் லிகிதர்களாகத்தான் செயற்படுகிறார்கள்; இந்த 'பொம்மை விளையாட்டு' மாற வேண்டும்—

இப்படி திரு. அத்துலத்முதலி சொன்னார். [எ-இ]

## இறுதி முடிவு 23 இல்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விசேஷ ஜி சி. ஈ பரீட்சைகளை நடத்துவது தொடர்பாக இறுதி முடிவு எடுக்க இம் மாதம் 23 ஆம் திகதி கொழும்பில் விசேஷ கூட்டம் ஒன்று நடைபெற இருக்கிறது.

கடந்த 9 ஆம் திகதி கொழும்பில் நடந்த கூட்டத்தில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டது. [இ - 5]

## தேம்பாவணி காவிய விழா

வீரமாமுனிவரின் ''தேம்பாவணி'' காவிய விழா நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்-பிரதான வீதி, மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறும்.

யாழ் திருமறைக் கலாமன்றம் நடத்தும் மேற்படி விழா கொழும்புத்துறை, புனித வளனார் மகாவித்தியாலய அதிபர் திருமதி பி. எஸ். சின்னத்துரை தலைமையில் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும். [இ-51[

## சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கூட்டம்

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் சொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும். [இ]

## கலைஞரை கச்சதீவுக்கு அனுப்ப வேண்டுமாம்

### சுப்பிரமணியம் சுவாமி சொல்கிறார்

தமிழக சட்டசபை தேர்தல் முடிந்ததும் தி மு. க. தலைவர் கருணாநிதியைக் கைது செய்து கச்சதீவுக்கு அனுப்ப வேண்டும்.

மத்திய சட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி முன் கண்டவாறு தெரிவித்தார்.

அ. தி. மு க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் 43 ஆவது பிறந்தநாள் கூட்டத்தில் பேசுகையில் சுப்பிரமணியம் சுவாமி இதனைத் தெரிவித்தார்.

தேர்தலுக்குப்பிறகு கருணாநிதி சந்நியாசம் போய்விடுவார். அவருக்கு நான் ஆசிரமம் தேடுகிறேன். அவரைக் கைது செய்து கச்சதீவுக்கு அனுப்பலாமா என்றும் யோசித்து வருகிறேன்''— என்றும் சுப்பிரமணியம் சுவாமி சொன்னார். [ஓ-எ]

## சுப்பிரமணியசுவாமி பரதேசி; கருணாநிதி அல்லர்!

### காளிமுத்து பதிலடி

சென்னை, மார்ச் 16

கருணாநிதியை கச்சதீவுக்கு அனுப்ப அவர் சுப்பிரமணிய சுவாமி போல ஒரு பரதேசி அல்லர்.

முன்னாள் மாநில அமைச்சர் எஸ் காளிமுத்து மைலாப்பூரில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன் கண்டவாறு சொன்னார்.

''கச்சதீவை தமிழ் நாட்டின் தலைநகர் ஆக்கினால் கலைஞர் கச்சதீவிலும் இருப்பார். கச்சதீவு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நடுவில் இருக்கிறது.

கச்சதீவில் கலைஞர் இருந்தால் இலங்கைத் தமிழருக்கும் அவர் உறு துணையாக இருப்பாரே தவிர, சுப்பிரமணியம் சுவாமிபோல் பரதேசியாக-இன்னொருவர் தயவிலே வாழக்கூடிய எடுபிடியாக—ஏவலாளாக—இருக்கமாட்டார்'' என்றும் திரு. காளிமுத்து சொன்னார். [உ-எ]

## மீதிப் பணத்துக்கு சவர்க்காரம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

நேற்று அமுலுக்கு வந்த 6 ஆம் கட்ட உலர் உணவு விநியோகத்தில் மீதியான பணத்துக்கு சவர்க்காரம் வழங்கப்பட வேண்டும் என்று செயலகத்தினால் ப.நோ.கூ. சங்கங்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. [இ-3]

## சங்கக்கடையில் தேங்காயும்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தேங்காயும் விற்கப்படுகிறது. அத்துடன் நிவாரணப் பொருள்களில் மைசூர்ப் பருப்புக்குப் பதிலாக உள்ளூர் உழுத்தம் பருப்பும் விற்பனையாகிறது. இ-12]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கீன் சென்ரர் ★

திருநெல்வேலி.

## A/L 91

| | | |
|---|---|---|
| தூய கணிதம் | — | ''வட்டம்'' |
| சனி, ஞாயிறு | — | 2 — 4 மணி |
| பிரயோக கணிதம் | — | ''நீர் நிலையியல்'' |
| சனி, ஞாயிறு | — | 8 — 10 மணி |

## A/L 92

| | | |
|---|---|---|
| தூய கணிதம் | — | ''நுண் கணிதம்'' |
| சனி, ஞாயிறு | — | 4 — 5 மணி |
| பிரயோக கணிதம் | — | ''காவிகள்'' |
| சனி, ஞாயிறு | — | 4 — 6 மணி |

ஆசிரியர்: திரு. பொன். ஈசன்

ஆரம்பம்: 16 — 03 — 1991

● புதிய பிரிவு ●

SPOKEN ENGLISH WITH GRAMMAR

திரு. A. றெஜினோல்ட்

சனி, ஞாயிறு 11 — 12-30 மணி

[சி-5894]


# மரண அறிவித்தல்கள்

## திரு. ர. சேனாதிராஜா

[இளைப்பாறிய பிரதான எழுதுவினைஞர், A. G. A. காரியாலயம், யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி குமாரசாமி வீதியைச்சேர்ந்த [சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட] திரு. ரட்ணசிங்கம் சேனாதிராஜா [இளைப்பாறிய பிரதான எழுதுவினைஞர், A. G. A. காரியாலயம், யாழ்ப்பாணம்] அவர்கள் 15 - 03 - 91 இல் காலமானார். அன்னார் திருமதி இராசம்மாவின் அன்புக் கணவரும், திருமதி நாகேஸ்வரி சுல்பகே [ஆஸ்திரேலியா], திருமதி சிவசோதி சத்தியமூர்த்தி, சசிதரன் [கனடா] ஸ்ரீநாகேஸ்வரா [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16 - 3 - 91 சனிக்கிழமை திருநெல்வேலி குமாரசாமி வீதியில் உள்ள 34 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 - 30 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி சே. இராசம்மா

மனைவி

இல. 34, குமாரசாமிவீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

[16129]

## தில்லையம்பலம் கந்தரத்தினம்

தெல்லிப்பழை முல்லாத்தனையைச் சேர்ந்த திரு. தில்லையம்பலம் கந்தரத்தினம் அவர்கள் 15 - 3 - 1991 அன்று காலமாகிவிட்டார். அன்னார் மாணிக்கப்பிள்ளையின் அருமைக் கணவரும், திருப்பதியின் அன்புத் தந்தையும், Dr. T. பரமேஸ்வரனின் அன்பு மாமனாரும், ஸ்ரீதேவன், பிரியதர்ஷினி, பாமதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று (16 - 3 - 1991) காலை 9-00 மணியளவில் அராலி வடக்கு, அராலியிலுள்ள திரு K. காங்கேசன் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அராலி வடக்கிலுள்ள மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

த. குலோத்துங்கபாரதி.

முல்லாத்தனை,
தெல்லிப்பழை.

[16131]

## செல்லத்துரை நடராஜா

[பிள்ளையார் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்]

அளவெட்டியைச் சேர்ந்த செல்லத்துரை நடராஜா [பிள்ளையார், ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்] 15 - 03 - 91 இல் காலமாகிவிட்டார். இவர் திருமதி சிதாலட்சுமியின் [ஓய்வு பெற்ற ஆசிரியை அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி] அன்புக் கணவரும், கிற்சபேசன் (சுவிஸ்), சிவயோகன் (சுவிஸ்), விக்கினேஸ்வரர் [சுவிஸ்]. காயத்ரி [இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆஷாதேவியின் அன்பு மாமனாரும், கிருத்திகாவின் பாட்டனாருமாவார்.

இறுதிச் சடங்குகள் 16 - 03 - 91 சனிக்கிழமை 10 மணிக்கு, கணேஸ்வரம் அளவெட்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

சி. செந்தில்நாதன்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

[16125]

# ஒரு வாரத்தில் 6 சைக்கிள்கள் மாயம்!

யாழ்ப்பாணம் மார்ச் 16

யாழ். ஆஸ்பத்திரிப் பகுதியில் பூட்டப்பட்டு நிறுத்தி வைக்கும் சைக்கிள்கள் அடிக்கடி திருட்டுப் போகின்றன. கடந்த ஒருவாரத்தில் மட்டும் ஆறு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆண் தாதி ஒருவருடைய சைக்கிளும் நேற்று மாயமாய் மறைந்து விட்டது.

அந்த இடத்தில் பழைய சைக்கிள் ஒன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாம்.

இதேவேளை—

சைக்கிள் திருட்டுத்தொடர்பாக நேற்று யாழ். ஆஸ்பத்திரி அமைய சிற்றூழியர் ஒருவர் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டார்.

திருடப்பட்டதாக கருதப்படும் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டது. [ஒ-15]

# அதிர்ச்சியால் மரணம்

குருநகர், மார்ச் 16

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் யாழ். நோக்கி வந்த ஒருவர் அதிர்ச்சியால் மயங்கி வீழ்ந்து மரணமானார்.

விடுதலைப் புலிகள் முன்னேறி வருவதாகக் கருதி, இராணுவத்தினரும், 'புளொட்' அமைப்பினரும், தலை தெறிக்க ஓடியதைப் பார்த்ததும் இவர் அதிர்ச்சியில் மயங்கி வீழ்ந்து மரணித்ததாகத் தெரிவிக்கப்பட்டது

குருநகரைச் சேர்ந்த முத்துத்தம்பி சந்தியாப்பிள்ளை (வயது 51) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். [உ 5]

# நாளை வெளிவரும்

யாழ்ப்பாணம், மார்ச் 16

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையின் மாசி- பங்குனி இதழ் நாளை வெளிவருகிறது.

''புதிய பரிணாமத்தில் இந்தியத் தலையீடு'' - என்ற தலைப்பில் ஆசிரிய தலையங்கம்—

வவுனியாவில் இந்திய இராணுவச் சிறை உடைப்புச் சம்பவம் பற்றிய கட்டுரை—

''குடும்பமாக வெளி நாடு சென்றோரின் சொத்துக்களைக் கையேற்கிறோம் இது சுவீகரிப்பல்ல'' - என்ற விளக்கக் கட்டுரை ஆகியவை உட்பட பல விடயங்கள் இந்த இதழில் பிரசுரமாகுகின்றன. [உ]

# சண்டையை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முக்கிய பகுதி வருமாறு:-

ஸ்ரீலங்காவில் யுத்தத்தால் பேரழிவு நடந்துகொண்டிருப்பது கவலை தருவதாகும். ஸ்ரீலங்கா அரசும், யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஏனையோரையும் வன்செயல்களை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விசேடமாக அரசு தான் நடத்தும் வானத் தாக்குதல்களையும் ஏனைய யுத்த நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும். நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பது அவசியம்- அதன் பொருட்டு அரசு சம்பந்தப்பட்டவர்களோடு பேச்சுக்களைத் தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும். சகலரும் சமம் என்ற உண்மையான அடிப்படையில் பல்லின சமூகம் ஒன்றை கட்டி எழுப்பி, [illegible] காயங்களை ஆற்றுவது அரசின் கடமை. [அ-3]

# மறுமலர்ச்சிக் கழக விழா

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் பதினோராவது ஆண்டு நிறைவு விழா இன்று நடைபெறுகிறது.

கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாக உள்ள விழாவில், பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்.

விழாவில் கருத்துரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [அ]

# படையினர் படம் எடுத்து விவரம் சேகரிக்கின்றனர்

கொழும்பு, மார்ச் 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களை குடும்பம் குடும்பமாக புகைப்படம் எடுத்து, அக் குடும்பத்தினரின் பெயர் மற்றும் விவரங்களை இராணுவத்தினர் சேகரித்து வருகின்றனர் என்று தெரிய வருகிறது.

மண்டூர், தம்பலவத்தை, பாலமுனை, 14 ஆம் கொலனி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு முதலில் படம் பிடிக்கப்பட்டனர். இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து புகைப்படம் பிடிக்கும் வேலைகள் நடைபெறுகின்றன.

இதே வேளை -

மண்டூர், நெடியவத்தை ஆகிய பகுதிகளில் வைத்து கடந்த மாதம் 10 ஆம் திகதி நடத்தப்பட்ட தேடுதலின் போது கைது செய்யப்பட்ட 29 தமிழர்களின் நிலை என்ன என்பது தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

# சந்திரசேகர் - ஜெயலலிதா தமிழகத்தில் தேர்தல் கூட்டு?

புதுடில்லி மார்ச் 16

தமிழகத்தில் அ. தி. மு. கவுடன் சந்திரசேகர் தலைமையிலான ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சி கூட்டு வைத்துக் கொள்ளக்கூடும்.

இத்தகவலை ஜனதாதள் [எஸ்] கட்சித் தலைமைப் பொதுச் செயலாளர் ஓம் பிரகாஷ் சௌதாலா நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மாநில அளவில் பிராந்திய கட்சிகளுடனும் தேசிய அளவில் பகுஜன் கட்சியுடனும் மட்டுமே ஜனதாதள் [எஸ்] கட்சி தொகுதி உடன்பாடுகளை வைத்துக் கொள்ளும் என்றும் ஓம்பிரகாஷ் சௌதாலா சொன்னார்.

இதற்கிடையில் இந்திய நாடாளுமன்றத்தேர்தலுடன் தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலையும் நடத்த தமிழக அரசு தயாராக இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது. [உ-எ]

# மீனவர்கள் தப்பினர்

புளியங்கூடல், மார்ச் 16

நேற்று முன்தினம் சுருவிலை அண்டிய கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் திடீரெனத் தாக்குதல் நடத்தினர்.

படகில் இருந்த 6 மீனவர்களும் கடலில் குதித்து நீந்தி கரைக்குத் தப்பிவந்து சேர்ந்தனர். [ஒ-125]

# றெட்பானா பிரதிநிதிகள் யாழ்நகரில்

யாழ்ப்பாணம், மார்ச் 16

நோர்வேயில் இருந்து றெட்பானா பிரதிநிதிகள் இருவர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

புனர்வாழ்வுப் பிரிவு பணிப்பாளரான நோர்வேயைச்சேர்ந்த திரு யக்கோப் டெக்ஸ்மோ, நோர்வே சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் மனோவியல் நிபுணர் டாக்டர் எலிஸபெத் ஐறே ஆகியோரே அந்த இருவரும் ஆவர். [ஒ 5]

# தாக்குதலில் மூவர் பலி

அம்பாறை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு சிங்களக் கிராமங்களில் இனந்தெரியாதவர்கள் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதலில் இரு ஆண்களும் ஒரு பெண்ணும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இரவு நடந்த இச்சம்பவத்தில் பலர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# தடை விதிப்பு

புதுடில்லி, ராஜ்கட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவுச் சின்னத்துக்கு அஞ்சலி செலுத்த பொதுமக்கள் செல்வது நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

காந்தி நினைவுச் சின்னம் அமைந்துள்ள பூங்காவினுள் காலணிகளுடன் நுழைய முயன்ற பகுஜன் கட்சித் தொண்டர்களை காவலர்கள் தடுத்து நிறுத்த முயன்ற போது ஏற்பட்ட வன்செயலில் நினைவுச் சின்னம் சேதமடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக ஐவர் கைது செய்யப்பட்டனர்.


## செஞ்சிலுவைச் சங்கம் - யாழ்ப்பாணக்கிளை
# அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 1991-03-24 காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். செயற்குழு உறுப்பினர் தெரிவும், சங்க அறிக்கை சமர்ப்பித்தலும், தீர்மானங்களும் மற்றும் விடயங்களும் நிகழ்ச்சி நிரலில் அடங்கும்.

கௌரவ செயலாளர்

16-03-1991. [C/5858]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 192/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org